
தூய ஆரோக்கிய அன்னை திருவிழா
நவநாள் – 09
செப்டம்பர் 08, 2023
அருளின் ஊற்றே!
பரிந்துரைக்கும் தாயே!

# அருளின் ஊற்றே! புரிந்துரைக்கும் தாயே!

## அன்பில் இணைவோம்

அருட்பணி: ஆண்டவருடைய மீட்பை அறிவியுங்கள்
அவருடைய அரும்பெரும்செயல்களை எடுத்தியம்புங்கள்
Priest: Announce the salvation of the Lord
Proclaim his works among the people

மக்கள்: என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்
People: His mercy is everlasting

அருட்பணி: இறைவார்த்தையால் இவ்வுலகை ஒளிர்வித்த
இறைவனை நாம் வாழ்த்துவோம்.
Priest: Bless the Lord our God
Who sent the Word of life into the World

மக்கள் ஆண்டவர் தம் செயல்களில் நீதியுள்ளவர்
அவருடைய செயல்கள் புனிதமானவை
அனைத்துலகே ஆண்டவரைப் புகழ்வாயாக
உயிருள்ள அனைத்தும் அவரின் திருநாமத்தை வாழ்த்துவதாக

People: Just is the Lord in all His ways And Holy in all His works
Let every creature praise Him and all living beings bless his name



## அன்னையை புகழ்ந்து பாடுவோம்.

ஞானம் நிறை கன்னிகையே
நாதனைத் தாங்கிய ஆலயமே
மாண்புயர் ஏழு தூண்களுமாய் -2
பலிப்பீடமுமாய் அலங்கரித்தாயே!

பாவ நிழலே அனுகாய் பாதுகாத்தார் உமையே பரமன்
பாவ நிழலே அனுகா! தாயுதரம் நீ தரித்திடவே
தனதோர் அமலன் தலமெனக் கொண்டார்

வாழ்வோர் அனைவரின் தாயே வானுலகை அடையும் வழியே!
வாழ்வோர் அனைவரின் தாயே
மக்கள் இஸ்ராயேல் தாரகையே –2
வானோர் துதிக்கும் இறைவியே வாழி!

## மன்றாடுவோமாக

ஆண்டவரே! எங்கள் இறைவா!
உமது அளவற்ற ஞானத்தாலும் அன்பாலும்
தூய கன்னிமரியாளை அருளின் ஊற்றானவருக்கு
தாயாகும் பேற்றினையளித்து மீட்பின் மறையுண்மையை கொண்டு செல்ல
அவருக்கு தோழமை துணையாகவும் தந்தருளத் திருவுளமானீரே!

அவர் எங்களுக்காக பரிந்து பேசுவதால்
உமது அருளை நிறைவாக நாங்கள் பெற்றுக்கொண்டு
நித்திய வாழ்வுக்கு வந்தடையச் செய்தருளும்.
உம்மோடு தூய ஆவியின்…..

**முன்மொழி: புனித மரியே வாழ்க! அன்பின் ஊற்றும் அருளின் உறைவிடமும் நீரே! கலங்கமற்ற உம் உதிரத்தில் மெய்யான கடவுளும் மெய்யான மனிதனுமானவரை ஈன்றெடுத்தீரே!**

## திருப்பாடலில் செபிப்போம்

# திருப்பாடல் - 66

1 அனைத்துலகோரே! கடவுளைப் போற்றி ஆர்ப்பரியுங்கள்!
2 அவரது பெயரின் மாட்சியைப் புகழ்ந்து பாடுங்கள்:
அவரது புகழை மேன்மைப்படுத்துங்கள்.
3 கடவுளை நோக்கி உம் செயல்கள் எவ்வளவு அஞ்சத்தக்கவை:
உமது மாபெரும் ஆற்றலின் காரணமாக
உம் எதிரிகள் உமது முன்னலையில் கூனிக்குறுகுவர்:
**புனித மரியே வாழ்க! அன்பின் ஊற்றும் அருளின் உறைவிடமும் நீரே!**

4 அனைத்துலகோர் உம்மைப் பணிந்திடுவர்:
அவர்கள் உம் புகழ் பாடிடுவர்:
உம் பெயரைப் புகழ்ந்து பாடிடுவர்' என்று சொல்லுங்கள்.
5 வாரீர்! கடவுளின் செயல்களைப் பாரீர்!
அவர் மானிடரிடையே ஆற்றிவரும் செயல்கள் அஞ்சுவதற்கு உரியவை.
**புனித மரியே வாழ்க! அன்பின் ஊற்றும் அருளின் உறைவிடமும் நீரே!**

7 கடலை உலர்ந்த தரையாக அவர் மாற்றினார்:
ஆற்றை அவர்கள் நடந்து கடந்தார்கள்.
அங்கே அவரில் நாம் அகமகிழ்ந்தோம்.
7 அவர் தமது வலிமையால் என்றென்றும் அரசாள்கிறார்!
அவர்தம் கண்கள் வேற்றினத்தாரைக் கவனித்து வருகின்றன:
கலகம் செய்வோர் அவருக்கு எதிராய்த் தலைதூக்காதிருப்பதாக!
**புனித மரியே வாழ்க! அன்பின் ஊற்றும் அருளின் உறைவிடமும் நீரே!**

8 மக்களினங்களே! நம் கடவுளைப் போற்றுங்கள்:
அவரைப் புகழ்ந்துபாடும் ஒலி கேட்கச் செய்யுங்கள்.
9 நம்மை உயிர்வாழச் செய்தவர் அவரே.
அவர் நம் கால்களை இடற விடவில்லை.
**புனித மரியே வாழ்க! அன்பின் ஊற்றும் அருளின் உறைவிடமும் நீரே!**

10 கடவுளே! எங்களை ஆய்ந்து,
வெள்ளியைப் புடமிடுவதுபோல் புடமிட்டீர்:
11 கண்ணியில் எங்களை விழும்படி செய்தீர்:
பளுவான சுமைகளை எங்கள் முதுகின்மீது சுமத்தினீர்.
**புனித மரியே வாழ்க! அன்பின் ஊற்றும் அருளின் உறைவிடமும் நீரே!**

12மனிதரை எங்கள் தலைகள்மீது நடந்துபோகச் செய்தீர்:
நெருப்பிலும் தண்ணீரிலும் அகப்பட்டிருந்தோம்:
ஆயினும், நீர் எங்களைப் பாதுகாப்பான
இடத்திற்குக் கொண்டுவந்து சேர்த்தீர்.
13எரிபலியுடன் உமது இல்லத்தினுள் செல்வேன்:
என் பொருத்தனைகளை உமக்குச் செலுத்துவேன்.
**புனித மரியே வாழ்க! அன்பின் ஊற்றும் அருளின் உறைவிடமும் நீரே!**

14அவற்றை என் துன்ப வேளையில் என் நா உரைத்தது:
என் வாய் உறுதி செய்தது.
15கொழுத்த கன்றுகளை செம்மறிக்கிடாய்களின் நறும்புகையோடு,
உமக்கு எரிபலியாகச் செலுத்துவேன்:
காளைகளையும் வெள்ளாட்டுக் கிடாய்களையும் உமக்குப் பலியிடுவேன்.
**புனித மரியே வாழ்க! அன்பின் ஊற்றும் அருளின் உறைவிடமும் நீரே!**

16கடவுளுக்கு அஞ்சி நடப்போரே! அனைவரும் வாரீர்! கேளீர்!
அவர் எனக்குச் செய்ததனை எடுத்துரைப்பேன்.
17அவரிடம் மன்றாட என் வாய்திறந்தது:
அவரை ஏத்திப் புகழ என் நா எழுந்தது.
18என் உள்ளத்தில் தீய எண்ணங்களை வளர்த்திருந்தேனாகில் ,
என் தலைவர் எனக்குச் செவிசாய்த்திருக்கமாட்டார்.
**புனித மரியே வாழ்க! அன்பின் ஊற்றும் அருளின் உறைவிடமும் நீரே!**

19ஆனால், உண்மையில் கடவுள் எனக்குச் செவிகொடுத்தார்:
என் விண்ணப்பக் குரலை உற்றுக் கேட்டார்.
20என் மன்றாட்டைப் புறக்கணியாத கடவுள்போற்றி!
தம் பேரன்பை என்னிடமிருந்து நீக்காத இறைவன் போற்றி!
**புனித மரியே வாழ்க! அன்பின் ஊற்றும் அருளின் உறைவிடமும் நீரே!**

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாகுக
தொடக்கத்தில் இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக–
ஆமென்.

**முன்மொழி: புனித மரியே வாழ்க! அன்பின் ஊற்றும் அருளின் உறைவிடமும் நீரே! கலங்கமற்ற உம் உதிரத்தில் மெய்யான கடவுளும் மெய்யான மனிதனுமானவரை ஈன்றெடுத்தீரே!**

# இறைவார்த்தைக்கு செவிமடுப்போம்

**திருத்துதர் யோவான் எழுதிய துய நற்செய்தியிலிருந்து வாசகம்**

யோவா: 2:1-11

1மூன்றாம் நாள் கலிலேயாவில் உள்ள கானாவில் திருமணம் ஒன்று நடைபெற்றது.
இயேசுவின் தாயும் அங்கு இருந்தார். 2இயேசுவும் அவருடைய சீடரும்
அத்திருமணத்திற்கு அழைப்புப் பெற்றிருந்தனர். 3திருமண விழாவில் திராட்சை இரசம்
தீர்ந்து போகவே இயேசுவின் தாய் அவரை நோக்கி இயேசுவின் தாய் அவரை
நோக்கி, 'திராட்சை இரசம் தீர்ந்துவிட்டது என்றார். 4இயேசு அவரிடம், 'அம்மா,
அதைப்பற்றி நாம் என்ன செய்யமுடியும்? எனது நேரம் இன்னும் வரவில்லையே

என்றார். [5]இயேசுவின் தாய் பணியாளரிடம், அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள் ' என்றார். [6]யூதரின் தூய்மைச் சடங்குகளுக்குத் தேவையான ஆறு கல்தொட்டிகள் அங்கே இருந்தன. அவை ஒவ்வொன்றும் இரண்டு மூன்று குடம் தண்ணீர்கொள்ளும். [7]இயேசு அவர்களிடம், 'இத்தொட்டிகளில் தண்ணீர் நிரப்புங்கள்' என்று கூறினார். அவர்கள் அவற்றை விளிம்பு வரை நிரப்பினார்கள். [8]பின்பு அவர், 'இப்போது மொண்டு பந்தி மேற்பார்வையாளரிடம் கொண்டு போங்கள் என்று அவர்களிடம் கூறினார். அவர்களும் அவ்வாறே செய்தார்கள். [9]பந்தி மேற்பார்வையாளர் திராட்சை இரசமாய் மாறியிருந்த தண்ணீரைச் சுவைத்தார். அந்த இரசம் எங்கிருந்து வந்தது என்று அவருக்குத் தெரியவில்லை: தண்ணீர் மொண்டு வந்த பணியாளருக்கே தெரிந்திருந்தது. ஆகையால் பந்தி மேற்பார்வையாளர் மணமகனைக் கூப்பிட்டு, [10]எல்லாரும் நல்ல திராட்சை இரசத்தை முதலில் பரிமாறுவர்: யாவரும் விருப்பம் போலக் குடித்தபின்தான் தரம் குறைந்த இரசத்தைப் பரிமாறுவர். நீர் நல்ல இரசத்தை இதுவரை பரிமாறாமல் ஏன் வைத்திருந்தீர்? ' என்று கேட்டார். [11]இதுவே இயேசு செய்த முதல் அரும் அடையாளம். இது கலிலேயாவில் உள்ள கானாவில் நிகழ்ந்தது. இதன் வழியாக அவர் தம் மாட்சியை வெளிப்படுத்தினார். அவருடைய சீடரும் அவரிடம் நம்பிக்கை கொண்டனர்.

**இது கிறிஸ்துவின் வாழ்வு தரும் நற்செய்தி**
**கிறிஸ்துவே உமக்குப் புகழ்..**

## A reading from the Gospel of St. John

**2:1-11**

**2** On the third day there was a wedding in Cana of Galilee, and the mother of Jesus was there. **2** Jesus and his disciples had also been invited to the wedding. **3** When the wine gave out, the mother of Jesus said to him, "They have no wine." **4** And Jesus said to her, "Woman, what concern is that to you and to me? My hour has not yet come." **5** His mother said to the servants, "Do whatever he tells you." **6** Now standing there were six stone water jars for the Jewish rites of purification, each holding twenty or thirty gallons. **7** Jesus said to them, "Fill the jars with water." And they filled them up to the brim. **8** He said to them, "Now draw some out, and take it to the chief steward." So they took it. **9** When the steward tasted the water that had become wine, and did not know where it came from (though the servants who had drawn the water knew), the steward called the bridegroom **10** and said to him, "Everyone serves the good wine first, and then the inferior wine after the guests have become drunk. But you have kept the good wine until now." **11** Jesus did this, the first of his signs, in Cana of Galilee, and revealed his glory; and his disciples believed in him.

**இறை வார்த்தையை உள்ளத்தில் இருத்தி சிந்திப்போம்...** (Reflection)

## இறைமக்களின் மன்றாட்டு

**அருட்பணி: ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பியதால் பேறுபெற்ற தாயே! எங்கள் ஆரோக்கிய அன்னையே! உம்மைப்—போல இறைதிட்டத்துக்கு நாங்களும் ஒத்துழைக்க உம்மிடம் எங்கள் வேண்டுதல்களை சமர்ப்பிக்கின்றோம்.**

1. அன்னையாம் திருச்சபைக்காக மன்றாடுவோம்: தாய் திருச்சபையை வழிநடத்தும் நமது திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள் குருக்கள் மற்றும் இறைமக்கள் நமது அன்னை மரியாவைப் போல ஆவியின் வரங்களால் நிரப்பட்டு எல்லோரையும்

மகிழ்விக்கும் நற்செய்தியின் கருவிகளாகத் திகழ்ந்திட ...

**அருள் நிறைந்த மரியே! கலங்கமற்ற கண்ணாடியே!**
**உம் பிள்ளைகளாகிய எமக்காய் மன்றாடும் தாயே!**

2. நமது தளத்திருச்சபைக்காக மன்றாடுவோம். நமது தலைமை ஆயர் மற்றும் இனையாயர்கள் நமது உயர் மறைமாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பங்களிலும் இறைவார்த்தையின் ஒளி மகிழ்சியிலும் மனநிறைவிலும் நாளுக்கு நாள் வாழ்ந்திட வளர்ந்திட...

**அருள் நிறைந்த மரியே! கலங்கமற்ற கண்ணாடியே!**
**உம் பிள்ளைகளாகிய எமக்காய் மன்றாடும் தாயே!**

3. அமெரிக்கா வாழ் இந்தியர்களுக்காகவும் அவர்களின் குடும்பங்களுக்காக மன்றாடுவோம். அன்பிலும் மகிழ்ச்சியிலும் ஒன்றுபட்டு வாழ்ந்து உலகிற்கு ஒளியாய்த் திகழ்ந்திட...

**அருள் நிறைந்த மரியே! கலங்கமற்ற கண்ணாடியே!**
**உம் பிள்ளைகளாகிய எமக்காய் மன்றாடும் தாயே!**

4. புனித ஆரோக்கிய அன்னையின் பத்தர்களுக்காக மன்றாடுவோம்: அன்னையைப் போல பிறரன்பிலும் இறையன்பிலும் நாளுக்கு நாள் வாழ்ந்து வளர்ந்திடவும் நற்செய்திக்குச் சான்றுபகர்ந்திடவும் அருள்வேண்டி..

**அருள் நிறைந்த மரியே! கலங்கமற்ற கண்ணாடியே!**
**உம் பிள்ளைகளாகிய எமக்காய் மன்றாடும் தாயே!**

5. உலக அமைதிக்காகவும், குறிப்பாக இந்தியாவில் குறிப்பாக மனிப்பூரில் அமைதி திரும்பவும், இயற்கை அழிவினால் பாதிக்கப்பட்ட மக்கள் மறுவாழ்வு பெறவும்...

**அருள் நிறைந்த மரியே! கலங்கமற்ற கண்ணாடியே!**
**உம் பிள்ளைகளாகிய எமக்காய் மன்றாடும் தாயே!**

6. நமது குடும்பங்களை அன்னையிடம் ஒப்படைப்போம். ஓவ்வொரு குடும்பங்களின் தேவைகள். அன்பு, அமைதி, குடும்ப ஒற்றுமை, இன்னும் பல்வேறு தேவைகளையும் குறிப்பாக விசா தேவைகள் அனைத்தையும் அன்னையிடம் ஒப்படைப்போம், இவற்றிலிருந்து மீண்டுடெழுந்து நாங்கள் அன்றாட ஆன்மீக வாழ்வில் வளரவும், எங்கள் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வில் நம்பிக்கை ஒளியில் வெற்றிநடைபோடவும்...

**அருள் நிறைந்த மரியே! கலங்கமற்ற கண்ணாடியே!**
**உம் பிள்ளைகளாகிய எமக்காய் மன்றாடும் தாயே!**

6. நமது தனிப்பட்ட தேவைகளுக்காக ....

**அருள் நிறைந்த மரியே! கலங்கமற்ற கண்ணாடியே!**
**உம் பிள்ளைகளாகிய எமக்காய் மன்றாடும் தாயே!**

## புனித ஆரோக்கிய அன்னை நவநாள் செபம்

மகா பரிசுத்த கன்னிகையே! இயேசுவின் தாயாராயிருக்குமாறு
பரிசுத்த மூவொரு கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்ட தூய கன்னி மரியே!
கடவுளுடைய திருப்புதல்வர் உமது திருஉதரத்தில்
மனிதராக அவதரித்தபோதும் ஒன்பது மாதமளவாக
அவரை உமது மாசணுகாத கருவில் தாங்கியபோதும்
நீர் அடைந்த பேரின்பத்தை உமது ஊழியர்களாகிய நாங்கள்

நினைவுகூர அருள்கூர்ந்தமைக்கு உமக்கு நன்றிகூருகின்றோம்.
எமது அன்பினாலும் தூய வாழ்வினாலும்
நீர் அடைந்த பேரின்பத்தை நாங்களும் அடைய
எங்களுக்காக மன்றாடும் தாயே!
துன்பப்படுவோரின் தாயே இரக்கமிக்க அன்னையே!
நீர் அனுபவித்த பேரின்பத்தைக் கொண்டாடுகின்றவர்களுக்கு
நீர் வாக்களித்துள்ள விசேச உதவியையும் பாதுகாப்பையும்
எங்களுக்கு இவ்வேளையில் பெற்றுத்தந்தருளும்.
கேளுங்கள் கொடுக்கப்படும் என்ற உம் திருமகன் இயேசுகிறிஸ்துவின்
வல்லமைமிக்க வார்த்தையில் நம்பிக்கைகொண்டு
உமது வல்லமைமிக்க மன்றாட்டுகளில் நம்பிக்கைகொண்டு
இந்த நவநாட்களில் நாங்கள் செய்யும் விண்ணப்பங்களை
கடவுளுடைய திருவுளத்திற்கு மாறாயிருந்தால்
எமக்கு எவ்வரம் மிகவும் தேவையோ அவற்றை பெற்றுத்தந்தருளும்.

**(இங்கு மன்றாட்டுக்களை நினைவிற்கொள்ளவும்)**

இறைவனின் தாயே! இப்பொழுது உமக்கு வணக்கமாக
நாங்கள் செய்யும் இந்த நவநாளை உம்மில்கொண்டிருக்கும்
ஆழ்ந்த நம்பிக்கையின்பொருட்டு செய்கிறோம்.
இயேசு மனிதராக அவதரித்தபோது
உமது திருவுளம் அடைந்த தெய்வீக மகிழ்ச்சியை
அதற்கு வணக்கமாக நாங்கள் செய்யும் இந்நவநாள் பக்தி முயற்சியையும்
இப்பொழுது நாங்கள் சொல்லப்போகும்
அருள் நிறைந்த செபத்தையும் அன்போடு ஏற்றுக்கொள்ளும் தாயே!

**(௯ முறை அருள் நிறைந்த செபம்)**

நீர் அணிந்திருக்கும் மணிமுடியில்
எம் செபங்கள் அத்தனையும் விண்மீண்களென துலங்குமென
ஆழ்ந்த நம்பிக்கைகொள்கின்றேன்.
வருந்துவோருக்கு ஆறுதலே!
எம் வேளைநகர் ஆரோக்கியத் தாயே!
நாங்கள் உம்மிடம் மன்றாடும் விண்ணப்பங்கள் நிறைவேறுமாறு
உமக்கு வணக்கமாக இதுவரை புனிதர்களால் செய்யப்பட்ட
எல்லா அரும்பெரும் நிகழ்வுகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.
உமது திருமகனும் எங்கள் ஆண்டவருமான
இயேசு கிறிஸ்துவின் திருஇருதயத்தில் பொங்கி வழியும் பேரன்பையும்
அதுபோன்ற உமது அன்பையும் நினைவிற்கொண்டு
உமது அடியோர்களாகிய எங்களது செபத்தை ஏற்று
எம் மன்றாட்டுகளை அடைந்து தந்தருளும் அம்மா. ஆமென்.

## அருள் நிறைந்த நம் ஆரோக்கிய அன்னைக்கு அஞ்சலி

ஆரோக்கிய மாதாவே-உமது
புகழ்பாடித் துதித்திடுவோம்
எந்நாளும் பாடித்துதித்திடுவோம்.

அலைகள் மோதிடும் கடற்கரை தன்னில்
வசித்திட ஆசை வைத்தாயே

பலவகை கலைகளும் பாரினில் துலங்கிட
அணைவர்க்கும் துணை புரிந்தாயே-2


தேன்கமழும் சோலை சூழ்ந்து விளங்கும்
வேளாங்கண்ணியில் அமர்ந்தாயே
வானகமும் இந்த வையகமும்
செழித்தோங்கிட அருள் புரிந்தாயே-2

## மன்றாடுவோமாக

பேரிரக்கமுள்ள இறைவா!
மெய்யான கடவுளும் மெய்யான மனிதனுமாக அவர்
உமக்கும் மனிதத்துக்குமிடையே ஒரே இணைப்பாளராகவும் (நடுநிலையாளராகவும்)
எங்களுக்காக என்றும் பரிந்து
பேசுபவராகவும் தேர்ந்தெடுக்கப்பாட்டார்.
உமது அளவற்ற ஞானத்தாலும் நன்மைத்தனத்தாலும்
மீட்பரின் தாயும் உடன் உழைப்பாளருமான
தூய கன்னி மரியா திருச்சபையின் தாயாகவும் பரிந்து பேசி
மன்னிப்பை பெற்றுத் தருபவராகத் திகழ்ந்திட திருவுளமானீரே.
அவர் எங்கள் மீது பொழிந்த அளவற்ற அன்பானது
ஒரே இணைப்பாளராக கிறிஸ்துவின் அன்பாலும் அன்பாகும்
அவளின் பிள்ளைகளாகிய நாங்கள் எங்கள் சோதனைக் காலங்களில்
அவரிடம் நம்பிக்கையோடு இரக்கத்தின் தாயாகவும்
அருளின் பகிர்ந்தளிப்பவளாகவும் நாடி வருகின்றோம்.
அன்னையைப் போல நாங்களும் தூய அன்பில் நிலைத்திருந்து
திருஅவையின் பிள்ளைகளாக வாழ அருள்தாரும்
உம்மோடு

## இறையாசீர்

**புனித மரியே வாழ்க!**
**அன்பின் ஊற்றும் அருளின் உறைவிடமும் நீரே!**
**கலங்கமற்ற உம் உதிரத்தில் மெய்யான கடவுளும்**
**மெய்யான மனிதனுமானவரை ஈன்றெடுத்தீரே!**



**Velankanni Community of Southern California**
**Divine Saviour Catholic Church**
**610 Cypress Ave, Los Angeles CA 90065**